மாரியம்மன் தீர்த்தக் கொடு

Q25:417
N14.
148167

உ

சிவமயம்.

எரிச்ச நத்தம்.

முத்துமாரியம்மன்
திருவிளையாடலென்னும்
முளைப்பாட்டு.

# மாரியம்மன்

# சந்தக்கும்மி.

இஃது
பேரையூர் சமஸ்தான வித்வான்
அஷ்டாவதானம்
பொன்னன்கூடற் செட்டியாரவர்களால்
இயற்றப்பட்டது.

மதுரை.
புதுமண்டபம் புஸ்தகஷாப்
எஸ். அய்யாசாமிபிள்ளை
அவர்களால்,

மதுரை வடக்குமாசிவீதி,
ஷண்முக விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கலாயின.

விலை) 1914. அணா1.)

330

Q25'.417
N14
118167

உ

சிவமயம்.

எரிச்சநத்தம்

# மாரியம்மன்பேரில்

## முளைப்பாட்டுசெந்தக்கும்மி.

பேரையூர்சமஸ்தானம் வித்வான் அஷ்டாவதானம்

பொன்னன்கூடற்செட்டியாரவர்கள்

இயற்றியது.



28 ... 1974
சென்னை-600 008

மதுரை புஸ்தகஷாப்

ஸ்ரீ. அய்யாசாமிபிள்ளை

அவர்களால்

மதுரை வடக்குமாசிவீதி,

ஷண்முக விலாஸம் பிரஸில்

பதிப்பிக்கலாயின.

இதன் விலை] 1914. [அணா 1

உ

சிவமயம்.

எரிச்சநத்தம்

# மாரியம்மன்பேரில்

## முளைப்பாட்டு.

——(*)——

சந்தக்கும்மி.

மாமகள்மேவிய பேரைநகர்தனில்
வாழ்ந்திடும் பெண்மயிலே வளையணி
வர்ணப்பசுங் குயிலே மலரென
வாழ்ந்திடுஞ் செங்கையிலே
பூமியிலேவிலை பார்த்திடிலாயிரம்
பொன்பெறுமுன் துகிலே (க)

மாடப்புருவே பசுங்கிளியே முத்தே
மாணிக்கமே தங்கமே கவிஞர்
வழுத்தும் பிரசங்கமே அழகைத்தான்
வாரிவரும் வங்கமே
தேடக்கிடையாத தெள்ளமுதேரூப
சித்ரமே சாரங்கமே (உ)

அன்னமேதேனே பசும்பாலேகற்கண்டே
அம்புயச் செந்திருவே நினைத்ததெல்
லாந்தரும் பைந்தருவே கற்புள்ளோர்
யாவருக் குங்குருவே
மன்னர்கிரீடமே பிச்சியே முல்லையே
மல்லிகையே மருவே (௩)

கண்ணுக்குட்கண்மணியேகனியே வெல்லக்
கட்டியே காமாட்சி அறிவுள்ள
கர்ரிகை யேசூட்சி உனையின்று
கண்டதே கண்காட்சி
பெண்ணுக்குட்பெண்ணசை கொள்ளுமுன்ரூபத்தை
பேசுவதோதாட்சி (௪)

வார்குழலைக்கண்டு கார்களனைத்தும்
மருண்டுளம் நாணுமடி பிறையென
வாணுதற் ரேங்குமடி புருவங்கள்
மாரன்விற் காணுமடி
கூர்விழிநீலம் விசாலம்புகன்றிடக்
கோடிநா வேணுமடி (௫)

எள்ளுப்பூச் சண்பக நாசியைக்கண்டா
லெதிர்வரக் கூசுமடி பவளத்தை
இன்னித ழேசுமடி உலகவாய்க்
கேதைத்தான் பேசுமடி
வெள்ளியுமுல்லையு முத்துமழுங்கப்பல்
மின்னொளி வீசுமடி (௬)

கன்னத்தைமாங்கனி யென்றுசொல்வேனிரு
காதுக்குவெள்ளை யோப்போ சங்கு
கழுத்துக்கொவ்வாது தப்போ தோளிணைக்
காம்புகைக் காந்தள் மெய்ப்போ
தென்னங்குரும்பைக ளோகுடமோமுகில்
தேங்காயோ வாய்ந்தசெப்போ (௭)

ஆலிலையோகத லிக்குருத்தோவயி
றற்புத ரோமவரை யிருக்குதென்
றுருஞ்சொல்வார்க திரை நிகம்ப
மலர்ந்திடுஞ் செந்தாமரை
போலிருக்குமிதி லையமுண்டோநீயே
பொற்புள்ள நல்லசிரை (௮)

கட்டுமெட்டான தொடைமதன்வீட்டினிற்
கட்டியவாழைத்தண்டே சிறுமுழங்
கால்களிரண்டு நண்டே மெச்சுங்கணைக்
காலைவிரால்கள் கண்டே
திட்டமாயாமையை யுள்ளடிக்கேநிகர்
செப்பலா முண்மைகொண்டே (௯)

அன்னமுந்தோர்க்குமே நன்னடையுன்னைப்போ
லாரையுங்காணேனே கலவனில்
லாதபசுந் தேனே உனக்கோ

14.8167
823.417
N47

ரதிசயம்நான்தானே
தன்மைபதாகவே சொல்கின்றேன்கேளடி
தையலே பொன்மானே (௰)

எண்டிசைபோற்று மெரிச்சநத்தந்தனி
லெப்போது முற்றவளாம் கலைகளெட்
டெட்டையுங் கற்றவளாம் உருக்கமாய்
என்றனைப் பெற்றவளாம்
தண்டமிழ்சொல்லவென் நாவினில்நிற்குந்
தயாபரிநற்றவளாம் (கக)

கங்கையணிந்த சடாதராீஸ்பரர்
கன்னிசிவகாமி மனமகிழ்
தண் ணுமையவாமி செழுங்கயற்
கண்ணீபிராமி
மங்கைவராகி குமாரிபுராதனி
வாணி யெனுநாமி (கஉ)

வித்தகியுத்தமா பத்தினிமுக்கண்ணி
வீரிமனோன் மணியாம் சகஸ்திர
வேதசிரோ மணியாம் புலவர்கள்
மெச்சுஞ்சிகாமணியாம்
சித்தசன்றன்னை யெரித்தநுதற்கண்ணன்
தேவிசிந் தாமணியாம் (கங)

சுந்தரியந்தரி சங்கரியம்பிகை
சூலி புரந்தரியாம் சிவசத்தி
சோதிதுரந்தரியாம் திரிபுரை
சுத்த நிரந்தரியாம்
மந்தர சூக்ஷி பொருந்திபவானந்தி
மாரிசவுந்தரியாம் (கச)

எங்கும்நிரந்தர மாகவிளங்கி
யிலங்கிய காரணியாம் இம்மையவ
ளோபரி பூரணியாம் மன்றினி
லாடிய நாரணியாம்
மங்களஞ்சேரு மெரிச்சநத்தந்தனில்
வாழ்ந்திடு நாரணியாம் (கரு)

அம்மகிடாசூரன் றன்னைவதைத்தப
ராக்கிரமக்காரி மிருந்தவ
லங்கிருதக்காரி அன்பர்கட்
கானவுபகாரி
தம்மைவணங்கிய பேர்க்கருளீயுமா
தங்கியெனும்மாரி (கசு)

என்னசொல்வேனந்தத் தாயின்பிரபல
மெத்தனையோ கோடி யென்நாவி
விசைத்திடலாமோடி அற்பமா
யெண்ணுகிறாய்போடி
சின்னஞ்சிறுபிள்ளை தோன்றுதுனக்குதான்
செப்புகிறேன்வாடி (கஎ)

எட்டையிரட்டித் திரட்டியதன்ம
மியற்றியமா நீலி அடிய
ரெனும்பயிர்க்கோர்வேலி அனைத்தையு
மீன்றின்னமுஞ் சூலி
சட்டமுடன்பணிந் தோருக்குச்செல்வந்
தழைத்தருள் வாள்கூலி (கஅ)

சம்புசதாசிவன் பாதத்தில்மேவிய
தாயுமவ ளாமே பணிந்தவர்
தாழ்வனைத்தும் போமே பொய்யென்று
சாற்றினல் நாவேமே
கும்பத்துதிப்பெண்ணே இன்னமுங்கேளடி
கூறுகிறோம் நாமே (கசு)

தந்திமுகத்து விநாயகமூர்த்தியாம்
சண்முகவேலாண்டி இவர்கட்குத்
தாயுமவள் தாண்டி தினந்தினந்
தன்மையுடன்வேண்டி
வந்தனைசெய்பவர் தீவினைமீனுக்கோர்
மாயப்பெருந்தூண்டி (உ௦)

அம்மதுராபுரி தன்னிலிருக்குமென்
னம்பிகைதானொரு பகீரதி
யானவள்தானொரு சரஸ்பதி

யானவள் தானாரு
செம்மலர்மேவிய லட்சுமியென்ற
சிறப்புடையாளாரு (உக)

எப்பொருளும்விளை வேற்றிக்கொடுக்கின்ற
இப்புவிமா ஞரு அயிராணி
என்பவள்தானாரு நட்சேத்திர
மென்பவள்தானாரு
மெய்ப்பல்லமுற்று மவள்வடிவாகும்
விசாரித்து நீபாரு (உஉ)

மேகமெழுந்து சுரந்துபெருமழை
விண்ணினிற் றூற்றுவதும்சுடரெல்லாம்
வெவ்விருள் மாற்றுவதும் கரையன்றி
வேலைநீர் தோற்றுவதும்
வாகுள்ளமாரியம்மன் செயலன்றிநான்
மற்றென்னசாற்றுவதும் (உஙு)

தேசத்திலேயவ ளல்லதுபெண்களில்
தெய்வங்கள் வேறுமுண்டோ உனக்குநான்
செப்புதல் திண்டுமுண்டோ நிசமென்றன்
செய்தியொன்றே யிரண்டோ
மாசற்றபேருக்குக் கேட்டவரங்கள்
வழங்குவள் தப்புமுண்டோ [உச)

மேதினியோர்செய்யும் பாவவிருளை
விலக்குமணித்தீபம் போலவும்
மின்னுமிவள்ரூபம் கேளாதே
வேறுபிரஸ்தாபம்
சோதனைபார்க்கவும் வேணுமோபொய்யதை
சொன்னதிலென்னலாபம் (உரு]

ஆனாலுமின்னமும் சொல்லுவேன்கேள்மாரி
யம்மையின்வைபோகம் கணக்கி
லடங்காதடி போகம் பூரிக்கு
தம்மம்மாயென்தேகம்
நானுமகிழ்ந்து புகழ்ந்திடவல்லவள்
நாயகி நாகரீகம் (உசா ]

ஆலயத்தினழ கென்னசொல்வேனடி
அம்புவியின் மீதே மற்ரு
ரளவிடப்போகாதே என்னைப்போ
லாருஞ்சொல்லார் மாதே
கோலமுடன்கயிலா சத்தில்மேவிய
கோவிலுமொவ்வாதே [உஎ]

வச்சிரத்தால்வரி யேற்றியபட்டியல்
வைத்துதளங்கூட்டி பவளத்தூண்
வாய்ப்புடனே நாட்டி போதிகை
மாமணியால் மாட்டி
பச்சையிலுத்திரங் கோமேதகம்விட்டம்
பரத்தியெழில்காட்டி [உஅ]

பொற்றகடிட்டுப் பொதிந்துநிலைவைத்துப்
பொற்கதவுந்தாக்கி முத்துச்சரம்
பூச்சரமுந் தூக்கிச் சித்திரப்
பொம்மைகளுண்டாக்கி
சுற்றிலும்வாழையும் பூங்கமுகும்பச்சைத்
தோரணமும்வீக்கி (உகூ]

வேடிக்கையாய்ப்பஞ்ச வர்ணக்குளோப்புகள்
மெல்லியவால் சேட்டு திக்கெல்லா
மெத்தவேதான்போட்டு பலபல
வெஞ்சுடரோன் கூட்டு
கூடிக்கொண்டேயிருந் தாற்போற்ருன்ஞது
கோவிலெனக்கேட்டு [௩0]

அந்தரதேவர்க ளிந்திரர்வந்திமை
யாமலேபார்த்துநிற்பார் வணங்கியே
யம்மனையே துதிப்பார் இதுகயி
லாசமென்றேமதிப்பார்
இந்தவினோதத்தை யெங்கும்நான்கண்டதே
இல்லையென்றேகுதிப்பார் [௩க]

ஆர்த்திடுவாத்திய மோசைக்குமேகங்க
ளத்தனையுந் தோர்க்கும் தாளங்க
ளாழியைப்போலார்க்கும் குழலோசை

ரண்டத்தைப்போய்ப்பார்க்கும்
சார்ந்தகைவீணையும் பிட்டிலுமாரப்பு
சத்தங்களைத் தூர்க்கும் [௧௨)

கந்திருவர்வந்து பாடும்பலபல
கானம்பெருகுமடி அதனாலே
கல்லு முருகுமடி உருகிய
கல்லு மிருகுமடி
அந்தணர் வேதமுழக்கத்தாற் பாவங்க
ளாவி கருகுமடி (௧௩]

மார்க்கமுள்ளரம்பைப் பெண்கள்வந்தேராகம்
மாங்குயிற்போற்பாடி நடனங்கள்
மாமயிற்போ லாடிவருமந்த
மாதர்கள்செய்மோடி
பார்க்கப்பலகோடி கண்ணிருந்தாலுமே
பற்றாதடிபோடி [௧௪]

தேனாபிஷேகமும் பாலாபிஷேகமுந்
தீர்க்கமாய்ச்செய்வாரும் சொர்ணாபி
ஷேகங்கள்பெய்வாரும் அரிச்சனை
செய்து துதிப் பாரும்
மானதபூசைகள் செய்துவரமெல்லாம்
வாங்கியேவுய்வாரும் [௧௫]

பூப்பழந்தேங்காய் கரும்புகள்மாமலை
போலே குவிப்பாரும் சருக்கரைப்
பொங்கல்கள்வைப்பாரும் மந்த்ரமுருப்
போட்டுச் செபிப்பாரும்
பார்ப்பதற்காகவே கூட்டத்திலேயிடி
பட்டுத்தவிப்பாரும் [௧௬]

அன்புடன்முட்டை முருங்கக்காய்மற்றது
மாக்கிப்படைப்பாருந் தேங்காயி
லைஞ்சாறடைப்பாரும் மனமகிழ்ந்
தங்கை புடைப்பாரும்
தென்புடனேயவள் பேரைப்புகழ்ந்துதன்
தீமை துடைப்பாரும் [௧௭]

பொன்பதினாயிரம் பெற்றகிடாய்வெட்டிப்
பொங்கலிடுவாரும் மஞ்சனை
பூசத்தொடுவாரும் விபூதியைப்
பூசிவிடு வாரும்
அன்புடனேவிர தங்களிருப்பதற்
காசைப்படுவாரும் (௩அ)

கோவிலைச்சுற்றியுருண்டுகொடுப்பவர்
கோடிக்குமேற்கோடி நிலங்கீரிக்
கும்பிடு வோர்கோடி அருட்கொண்டு
கூத்தாடு வார் கோடி
தாவிப்பிரம்பு சலாகைக்கயிறுகள்
தான்குத்துவார்கோடி (௩௯)

மாவிளக்கைம்பதி னாயிரங்கோடியோ
மற்றதிலேயிரட்டி ஆலத்தி
மற்றதிலேயிரட்டி நீராஞ்சனம்
மற்றதிலேயிரட்டி
தேவிக்குமங்களம் பாடுமின்னார்களைச்
செப்பிடில்நாலிரட்டி (௪௰)

மக்கள்வரங்கேட்க வாரமடந்தையர்
மற்றதிலே யிரட்டி தீர்க்காயுள்
வாங்குவோரோரிரட்டி செல்வம்பெற
வாரவர்மூ விரட்டி
மிக்கபிணியால் வருந்தினேன்தீரென்று
வேண்டுவோரோரிரட்டி (௪௧)

இப்படிவந்துவணங்கிய பேரெல்லாம்
ஏற்றவரம் வாங்கி வெகுசெல்வ
மென்றெங்கு மேதாங்கி கவலைக
ளென்பதெல்லாம் நீங்கி
இப்புவிவாழ்ந்து மெரிச்சநத்தம்தா
னிருக்குதுமேலோங்கி (௪௨)

ஓயாமற்சொல்லுகிறேனென்று நீசற்று
முள்ளஞ்சலியாதே வியாகுல
முற்று மெலியாதே மெலிந்திடி

லொன்றும்பலியாதே
வாயாற்சொல்வோரினுங் கேட்பவர்க்கேபுண்ணியம்
வாய்க்கும்நலியாதே (சங)

நங்கையேயின்னமுஞ் சற்றேநீகேளடி
நட்டணைசெய்யாதே வேறொன்றில்
ஞாபகம்வையாதே எதுவேனும்
நான்சொன்னாற் பொய்யாதே
கங்கையணிமாரி யம்மன்பிரஸ்தாபங்
காதுக்குங்கையாதே (சச)

எத்தனையென்று நான் சொல்லுவேன்வேடிக்கை
இன்ன மிருக்குதடி சொல்லச்சொல்ல
இன்பம்பெருக்குதடி பரவச
மென்னை யுருக்குதடி
சித்திவிளைந்திடும் மாரித்தாய்கோவிலிற்
செல்வஞ்செருக்குதடி (சரு)

அம்மைகொட்டிமக்கள் தங்களைக்காத்தரு
ளற்புதக்கோமாட்டி மனதுக்கே
யானந்தம்பாராட்டி மூளைகளுண்
டாக்கிய சீரரட்டி
கொம்மைகொட்டிவிளை யாடுமெதிசயங்
கூரக்கேள் சீமாட்டி (சசு)

ஊரிலிருக்குஞ் சன்றோர்மடைந்தைய
ரொன்றுபோலேகூடி தடாகத்தி
லூற்றுநன்னீ ராடி கலைக
ளூடித்திமலர் சூடி
சீர்பெருங்கண் ணுக்கு மையுந்திலதமுந்
தீட்டியபின்னாடி (சஎ)

ஆபரணங்களைப் பதாதிகேசங்க
ளத்தனையு மணிந்து பத்தியா
யம்மனையேபணிந்துத் சித்தத்தி
லன்புகொண்டே துணிந்து
சோபனமங்களம் பாடிக்கொண்டேபரி
சுத்தத்துடன்கனிந்து (சஅ)

தங்கள்முளைப்பாரி தன்னையெடுத்ததிற்
சக்கரையை திரைத்து முளைத்திடத்
தக்கதெல்லாம்விரைத்து பசும்பாலைத்
தண்ணீர்தரயிரைத்து
பங்கமில்லாமலே காற்றுவெயிலும்
படாதபடிமறைத்து (௪௯)

காலையும்மாலையும் பாலையுந்தேனையுங்
கையிலள்ளித்தெள்ளிது பிறத்தியார்
காணாமலே யொளித்து இராத்திரி
காலத்திலும் விழித்து
ஏலவளர்வதும்பார்த்துக்களித்துப்பின்
னேழுநாளுங்கழித்து (௫௰)

மற்றதினத்தினிற் பேரிகை சல்லரி
மல்லரியும் முழங்கத் துந்துமி
வாத்தியமுந்தளங்க முரசு
மடமடன்றேவிளங்க
கற்றவர்வேதியர்க் காடலரள்ளிக்
கனகநிதிவழங்க (௫௧)

தாங்கலில்லாமல் வளர்த்தமுளைக்குச்
சாம்பிராணித்தூபமிட்டு குங்குமக்
சாந்துத்தெளிந்து விட்டு முளைகளைத்
தங்கள்கையாலேதொட்டு
பாங்குடனேமாரியம்மன்பதத்தினிற்
பத்திவைத்தே கும்பிட்டு (௫௨)

பொற்றட்டிலேமுளைப் பாரியெல்லாம் வைத்துப்
பூவையர்கொண்டுவரக் கணவர்கள்
பூரித்துக்கண்டு வரப் பல்லாண்டுகள்
பூசுரர்விண்டு வர
சற்றுசற்றுய்மட மாதரும்மக்கள்
தளர்ந்து துவண்டுவர (௫௩)

மக்களும்பேரரும் பேத்திகளும்மரு
மக்களுஞ் சுற்றிவர சுற்றத்தார்
வாஞ்சையாய்ப்பற்றிவரக் கைகோர்த்து

வாலிபர்சுற்றிவர
தக்கதலையாரி மார்சிலசந்தடி
தன்னையகற்றிவர (ருச)

கன்னியர் நன்னடை தன்னையவ்வன்னங்கள்
கற்றிடக் கெஞ்சிவர வண்டுகள்
கண்ணைக்கண்டஞ்சிவா அவரவர்
காதலர் கொஞ்சிவர
கண்ணல்வில்வாங்கிய மன்மதன்போர்க்குக்
கடுஞ்சின மிஞ்சிவர (ருரு)

பட்டுக்குடை தங்கக் குப்பிகள்வைத்துப்
பாரிசமோடிவரக் கீதங்கள்
பாவலர்பாடிவாவேடிக்கை
பார்ப்பவரோடிவர
கொட்டுக்கிணங்கவே கோடானகோடிபேர்
கூத்துகளாடிவர (ருசு)

மாதரிடுங்குர வைத்தொனியண்டத்தின்
மட்டுஞ்சிலையோட பலவகை
வர்னக்கொடி யாட அதுசென்று
வானக்கதிர் மூட
வீதியெல்லாம்நெருங் கிப்பலமாதாகள்
வெண்சாமரைபோட (ருஎ)

பைப்பயபைய நடந் திங்கிதமாகவே
பாவையர் கொண்டுவந்து கோவில்முன்
பாகவைத்தே யுவந்து நன்ருப்முளைப்
பாரியைச்சுற்றி வந்து
தையலர்கும்மி யடித்ததைச்சொல்லுவேன்
சந்தோஷமேமிகுந்து (ருஅ)

அங்கம்மா தங்கம்மா லிங்கம்மாரங்கம்மா
அம்மம்மா மீனட்சி பொன்னம்மா
அன்னம்மா பொம்மாச்சி சின்னம்மா
ஆவுடை காமாட்சி
சங்கரம்மாமுத்து லட்சிமிமுத்தம்மா
தாயம்மா சாலாட்சி (ருகூ)

குப்பம்மாசுப்பம்மா நாகம்மாவேலம்மா
குப்பி கருப்பாயி சக்கம்மா
கூடம்மா குப்பாயி லட்சுமி
கூடிசிவப் பாயி
முப்பத்திரண்டு முழச்சேலைகட்டிய
முத்துக்கருப்பாயி (௬௰)

மாணிக்கமாலை யணிந்தமரகத
வல்லியுடன்ருமி அபிஷேக
வல்லி சிவகாமி கற்பூர
வல்லி யபிராமி
காணிக்குவாய்த்தவள் சண்பகவல்லிகட்
டாணிரெகுராமி (௬௧)

இத்தனைபேர்களு மன்றிமடந்தைய
ரின்ன மனேகமடி அவர்குழ
லென்பது மேகமடி அவர்கழுத்
தென்பது பூகமடி
சித்திரக்காரரெழுதிய வன்னமோ
செம்பொன்னேதேகமடி (௬௨)

சிந்துரப்பொட்டொடு சந்திரற்குள்ளெழுஞ்
செங்கதிர்போலாமே அவர்மொழி
தேனெடு பாலாமே அவர்விழி
சீரிய வேலாமே
மந்தரமங்கையர் சாயலைக்கண்டிடில்
மாமயில் போலாமே [௬௩]

ஒன்றுபோலகுனிந் தொன்றுபோலேநிமிர்ந்
தொன்றுபோலே சுதிப்பார் அனைவரு
மொன்றுபோலே குதிப்பார் அனைவரு
மொன்றுபோலே மதிப்பார்
ஒன்றுபோலேதுணிந் தொன்றுபோலேபணிந்
தொன்றுபோலே துதிப்பார் [௬௪]

கொண்டைத்திருக்குச் சிவந்திப்பூராக்கடி
குப்பிமுடி மின்னவே நிலாப்பிறை
கோலமொடுமின்னவே விந்தைச்சரக்

கோர்வை நுதல்மின்னவே
தண்டிப்பெண்கள்கொம்மைகொட்டுவார்கண்டோர்
சபாசுசபாசென்னவே [சுஙி]

காதிற்கொப்போலே சிமிக்கிருடு
கதிர்விட்டொளிவீச சுடரோனைக்
கண்ட படியேச கண்டவர்
காரண மாய்ப்பேச
சாதித்துக்கும்மி யடிப்பாரடிதேவர்
தையலருங் கூச [சுசு]

சொர்னப்பணிகள் கழுத்திற்கிடந்து
துவள நடிப்பாரடி குழல்களைச்
சுற்றிமுடிப்பாரடி கரங்களைத்
தூக்கிநொடிப்பாரடி
பின்னற்சடைகள் முதுகிற்கிடந்து
பிரள வடிப்பாரடி [சுஎ]

சங்கையில்லாமலே மாங்குயில்போலவே
தாமு மடிப்பாரடி சிலதுபேர்
தாளும்பிடிப்பாரடி வெயர்வைகள்
தன்னைவடிப்பாரடி
மங்கையரெல்லாம் குனிந்துநிமிர்ந்துகை
கொட்டியடிப்பாரடி. சுஅ

சிற்றிடைநோகுமென் றேயிருகாலிற்
சிலம்பு விளம்புமடி தாயார்கள்
சித்த முளம்புமடி கண்ணெனுஞ்
சேல்கள்தளம்புமடி.
சுற்றியடிப்பதற் கூந்தலின்வண்டு
துதைந்துகிளம்புமடி சுகூ

வன்னமாமேகலை தன்னிலேரிட்ட
மணிகள் கிலுங்குமடி கரத்தில்
வளைகள் குலுங்குமடி முகங்கள்
மதிபோ லிலங்குமடி
கன்னலின்சொற் கனிந்தமின்னார்பல்லிற்
காவி துலங்குமடி (எ௦)

வாரிமுடித்த கருங்குழர்பூமது
மாரிபொழியுமடி மகரந்தம்
வளர்ந்துவழியுமடி யவர்புரு
வங்கள்நெளியுமடி
ஊரிலிருக்கு மெலிகளொலியினு
லோடி யொளியுமடி [எக]

பாதங்கயங்குமென் றெண்ணியேபட்டுப்
பாவாடையைவிரிப்பார் கழன்ற
பணிகளையே தரிப்பார் பையப்
பையவென் ருதரிப்பார்
மாதர்குரவை களிட்டுமனது
மகிழ்ச்சிகொண்டே சிரிப்பார் [எஉ]

வாடிவதங்கி விடாமல்முளையை
மறைத்து வளர்த்தோமே பசுவின்பால்
வார்த்து வளர்த்தோமே அம்மைபதம்
வாழ்த்தி வளர்த்தோமே
நாடியேபெற்ற குழந்தையைப்பார்க்கிலும்
நன்ருய் வளர்த்தோமே [எங.]

காற்றடிபட்டுக் கருகிவிடாமற்
கனிந்துவளர்த்தோமே தினந்தினங்
காத்துவளர்த்தோமே ஒன்றுக்கொன்று
காப்பாய் வளர்த்தோமே
போற்றிவளர்த்தோமே சித்தத்திலேயன்பு
பூண்டுவளர்த்தோமோ [எச]

பத்தரைமாத்தும் பசும்பொன்னுற்செய்த
பருசு வளர்த்தோமே வெகு
பாங்காய் வளர்த்தோமே அடிக்கடி
பார்த்து வளர்த்தோமே
சுத்தமும்பத்தியும் நித்தமும்வைத்துநாம்
ஜோக்காய் வளர்த்தோமே [எரு]

என்றுமடத்தையரொன்றுபோலேசொல்லி
எல்லாமடிப்பாரே பசுங்கிளி
யென்னவடிப்பாரே செழுங்குர

லென்னவடிப்பாரே
நின்றுசகலரும் பார்த்திடவேவெகு
நேரமடிப்பாரே [எசு]

கொம்மைகள்கொட்டியேபின்புமேயாவரும்
கொட்டு முழக்கோடு முளைகளைக்
கொண்டுபோய் நீரூடு சேர்த்துக்
குணத்துடனே வீடு
செம்மையுடன்வந்துவாழ்வாரிதற்குண்டோ
தேசத்திலேயீடு [எஎ]

ஆராலேசொல்லி முடியுமடிமாரி
யம்மன் திருக்கூத்து என்னாலே
ஆனமட்டும்சேர்த்துசொன்னேனிதை
அந்திசந்தி வாழ்த்து
பூராவாய்ப்புண்ணிய முண்டடிமாரித்தாய்
பொற்பதம் நீபோற்று [எஅ]

மந்திரவேதங்கள் வாழிமறையவர்
வாழி கடல்வாழி புவனங்கள்
வாழி புனல்வாழி புலவர்கள்
வாழி தமிழ்வாழி
கொந்தலருங்குழல் மாரித்தாயுமவள்
கோவிலுந்தான் வாழி [எகூ]

இந்தச்சந்தக்கும்மி தன்னைப்படிப்பவர்
எல்லவரும்வாழி கேட்பவர்
எல்லவரும்வாழி நினைப்பவர்
எல்லவரும்வாழி
செந்திருவான நற் சந்தக்கும்மிச்சொற்
சிறப்புடனேவாழி [அ0]

மாதமும்மாரி பொழிந்துவிளைந்து
மலிந்து மிகவாழி யதிகசெல்
வஞ்செழித்தேவாழி யனைவரும்
மக்கள் பெற்றேவாழி
நீதமிகுந்த எஸ். அய்யாசாமிபிள்ளை
நெடுங்கலுமேவாழி. [அக]

மாரியம்மன்பேரில் சந்தக்கும்மி, முற்றுப்பெற்றது.

11.8167

# எமதிடம் கிடைக்கும் சோதிட புத்தகங்கள்,

| | | | |
|---|---|---|---|
| வருஷாதி நூல் | | 1 | 6 |
| ஷை பெரிதுசோதிட்க்கி கிரகசிந்தாமணி | 0 | 3 | 0 |
| ஷை நயம்பதிப்புகிளே | 0 | 8 | 0 |
| சாதக அலங்காரம் | 0 | 4 | 0 |
| ஷை நயம்பதிப்பு | 0 | 8 | 0 |
| சாதகஅலங்காரஉரை | 1 | 8 | 0 |
| சாதகசூடாமணி | 0 | 2 | 0 |
| சாதகக்கணிதாமிர்தம் | 0 | 2 | 0 |
| நவரத்தினமாலை மூல | 0 | 4 | 0 |
| தாண்டவமாலை உரை | 0 | 2 | 0 |
| சோதிடமாலை | 0 | 2 | 0 |
| சூடாமணிஉள்ள முடை யான்நயம் பதிப்பு | 0 | 7 | 0 |
| வீமேசும் உள்ள முடையான் | 0 | 6 | 0 |
| ஜெயமுனி வாக்கியம் | 0 | 2 | 0 |
| மணிகண்ட கேரளம் | 0 | 2 | 0 |
| மரணகண்டி | 0 | 3 | 0 |
| சாதகசிந்தாமணி | 0 | 12 | 6 |
| குமாரசாமியம் | 0 | 10 | 0 |
| சந்திரகாவியம் | 0 | 2 | 0 |
| ஷை பெரிது | 0 | 2 | 0 |
| ஜினேந்திரமாலை | 0 | 6 | 0 |
| ஷை நயம்பதிப்பு | 0 | 12 | 0 |
| சோதிடக்களஞ்சியம் | 0 | 2 | 6 |
| ஷை நயம் | 0 | 9 | 0 |
| கீழ்நீர்நிலை அரியும்கூப 0 சாஸ்திரம் | 0 | 4 | 0 |
| போகர் பஞ்சபட்சி | 0 | 8 | 0 |
| உரோமரிஷி பட்சி | 0 | 6 | 0 |
| அகஸ்த்தியா பட்சி | 0 | 3 | 0 |
| பட்சபட்சிஅரிச்சுவடி | 0 | 2 | 0 |
| பஞ்சபட்சிசந்திரிகை | 0 | 5 | 0 |
| மனைபடி சாஸ்திரம் | 0 | 4 | 0 |
| சர்வார்த்தசிற்பசிந்தா 1 ணி0ர0 | | | |
| மனையாருடச்சிந்த0 | ரீ | 2 | 6 |

| | | | |
|---|---|---|---|
| வினவிதி விளக்கம் | 0 | 4 | 0 |
| வால்மீகர் ஆரூடம் பெரிது | 0 | 2 | 0 |
| சத்தியாரூடம் | 0 | 2 | 0 |
| கந்தராரூடபோகம் | 0 | 4 | 0 |
| அஷ்டதிக்குஆரூடம் | 0 | 12 | 0 |
| ஆரூடாத்தினகரம் | 0 | 8 | 0 |
| நவகண்ட ஆரூடம் | 0 | 8 | 0 |
| ஆரூட சேகரம் | 0 | 10 | 6 |
| சித்தராரூடம் | 0 | 2 | 0 |
| அலகையாரூடம் | 0 | 8 | 0 |
| ஜாதகாரூடம் | 0 | 10 | 0 |
| பனிரெண்டுரூசி ஆரூட | 0 | 1 | 0 |
| அங்கவித்தை தூதலெட் சண ஆரூடம் | 0 | 2 | 0 |
| இராமதேவர்ரேகைசாஸ் திரம் படத்துடன் | 0 | 6 | 0 |
| ஷை உரையுடன் | 0 | 12 | 0 |
| நந்திநூல் ரேகை | 0 | 1 | 6 |
| ஸ்திரீ புருஷாள் சாமுத் திரிகாலெட்சணம் | 0 | 12 | 0 |
| ஷை சிறிது | 0 | 8 | 0 |
| அஸ்தகுரிசாஸ்திரம் | 0 | 2 | 0 |
| வால்மீகர் ஆண்பால் ரேகை சாஸ்திரம் | 0 | 12 | 0 |
| அங்கக்குறி சாஸ்திரம் | 0 | 1 | 9 |
| கமலமுனிரேகைவுரை | 0 | 0 | 0 |
| கெவுளி சாஸ்திரம் | 0 | 0 | 9 |
| ஷை பெறிதுசக்கரத்து | 0 | 2 | 6 |
| சந்தனநூல்ராஸ்திரம் | 0 | 2 | 0 |
| சந்தனக்கொறடு | 0 | 3 | 0 |
| தொடுகுறி சாஸ்திரம் | 0 | 0 | 9 |
| ருதுசாஸ்திரம் | 0 | 0 | 6 |
| தும்மநூல் துடிநூல் | 0 | 1 | 0 |
| சகாதேவன் மரணகுறி | 0 | 0 | 6 |
| ருதுநூல் | 0 | 1 | 0 |
| நவககிரக சோதிட ஆசிரிய நிகண்டு | 0 | 1 | 0 |

எஸ். அய்யாசாமிபிள்ளை,

மதுரை புதுமண்டபம், புக்ஷாப்.

ab/11-30